Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous Case No. CC. 225/2025

Preliminary Register

Deposition of PW- 1 LW -1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Father Name | : | தர்மராஜ் |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கிராம நிர்வாக அலுவலர்- உத்தமதானபுரம் |
| Religion | : | | Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து உத்தமதானபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி இளக்கியா மதகரம் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிகிறார். சம்பவ காலத்தில் மதகரம் கிராமத்தில் கூடுதல் பொறுப்பில் பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.03.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் பவுன்ராஜ் என்பவரது மனுவை விசாரிப்பதற்கு நானும் இளக்கியா என்பவரும் தெற்கு நாயக்கன் பேட்டை சென்றிருந்தோம். விசாரணையை முடித்துவிட்டு திரும்பி வரும்போது எனது இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட இளக்கியா பின்னால் அமர்ந்து வந்தார். பவுன்ராஜ் வீட்டின் அருகே ஆஜர் எதிரி ஆட்டோவில் என்னை வழிமறித்து நீ என்ன

கலெக்டரா நீ எப்படி எனக்கு சொந்தமான இடத்தில் எப்படி கல் நட்டாய் என்று ஒருமையில் என்னை பேசி எனது இருசக்கர வாகனத்தின் சாவியை பிடிங்கிக்கொண்டு வாகனத்தை கீழே தள்ளி விட்டார். எனக்கு கைவிரலில் கீரல் ஏற்பட்டது. இளக்கியாவிற்கு பெரிதாக அடி ஏற்படவில்லை. எனது இருசக்கர வாகனத்தை சம்பவயிடத்திலேயே நிறுத்தி வைத்துவிட்டு பின்னர் நடந்த சம்பவத்திற்கு காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் பி.ஏ படித்துள்ளேன். நான் எத்தனை வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன் என்றால் 5 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். பொதுவாக புல எண் சம்பந்தமாக ஒரு இடத்தை அளப்பதற்கு மனு கொடுத்தால் அருகில் உள்ள இடத்தின் உரிமையாளர்களுக்கும் கிராம உதவியாளர் மூலமாக அறிவிப்பு கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள மதகரம் கிராமத்தின் கூடுதல் பொறுப்பு வகிக்கிறேன் என்பதற்கு உரிய எழுத்து மூல ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பவுன் ராஜ் என்பவர் பட்டா கேட்டு மனு கொடுத்துள்ளார் அதன் பேரில் விசாரணை செய்ய சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். பவுன் ராஜ் என்பவரின் இடத்தின் அருகில் இவ்வழக்கின் எதிரி முருகானந்தத்தின் இடம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பவுன் ராஜ் என்பவர் கொடுத்த மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய்துறையின் விதிமுறைகளின் படி நான் எவ்வித அறிவிப்பும் ஆஜர் எதிரிக்கு வழங்கவில்லை என்றால் கிராம உதவியாளர் மூலம் அருகில் உள்ள இடத்தின் உரிமையாளர்களுக்கு வாய்மொழியாக தகவல் கூறியிருந்தேன்.

எழுத்துபூர்வமாகத்தான் அருகில் உள்ள இடத்தின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வழங்கவேண்டும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, கடந்த 19.03.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் பவுன்ராஜ் என்பவரது மனுவை விசாரிப்பதற்கு நானும் இளக்கியா என்பவரும் தெற்கு நாயக்கன் பேட்டை சென்றிருந்தோம். விசாரணையை முடித்துவிட்டு திரும்பி வரும்போது எனது இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட இளக்கியா பின்னால் அமர்ந்து வந்தார். பவுன்ராஜ் வீட்டின் அருகே ஆஜர் எதிரி ஆட்டோவில் என்னை வழிமறித்து நீ என்ன கலெக்டரா நீ எப்படி எனக்கு சொந்தமான இடத்தில் எப்படி கல் நட்டாய் என்று ஒருமையில் என்னை பேசி எனது இருசக்கர வாகனத்தின் சாவியை பிடிங்கிக்கொண்டு வாகனத்தை கீழே தள்ளி விட்டார். எனக்கு கைவிரலில் கீரல் ஏற்பட்டது" என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன் கையில் காயம் ஏற்பட்ட விபரத்தை மட்டும் போலீசார் விசாரணையில் கூறவில்லை. ஆஜர் எதிரிக்கு முறையாக அறிவிப்பு சார்வு செய்யாதது பற்றி எதிரி கேட்டதால் தான் அலுவல் ரீதியான பிரச்சனையை தடுக்க ஆஜர் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் என்று கொடுத்தேன் என்றால் சம்பவம் நடைபெற்ற மறுநாள் கொடுத்தேன். சம்பவம் நடைபெற்றதாக கூறும் நாளில் நான் எங்கு இருந்தேன் என்றால் மதகரத்தில் இருந்தேன். நான் எதிரிக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.23 18:11:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 225/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இளக்கியா | Husband Name | : | ராமச்சந்திரன் |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கிராம உதவியாளர்- மதகரம் |
| Religion | : | | Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து தற்போது மதகரத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். சம்பவ காலத்தல் அ.சா.1 கூடுதல் பொறுப்பாக கிராம நிர்வாக அலுவலராக மதகரம் கிராமத்தில் இருந்தார். கடந்த 19.03.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நானும் அ.சா.1 ம் வேலை நிமித்தமாக தெற்கு நாயக்கன் பேட்டைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். அப்போது எங்களுடைய களபணியை முடித்துவிட்டு பவுன்ராஜ் வீட்டின் அருகே அ.சா. 1 இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வந்தேன். அப்போது ஆஜர் எதிரி ஆட்டோவில் வந்து எங்களை வழிமறித்து இருசக்கர

வாகனத்தின் சாவியை பிடிங்கி தகாத வார்த்தைகளால எங்கள் இருவரையும் பேசினார். எப்படி இந்த இடத்தை விட்டு செல்வாய் என்று எங்களிடம் பிரச்சனை செய்தார். ஆஜர் எதிரி வண்டியை கீழே தள்ளியதில் அ.சா.1 க்கு கை விரலில் கீரல் ஏற்பட்டது. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. நடந்த சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றாலும் கிராம நிர்வாக அலுவலர் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.23 18:11:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 225/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | லதா | Husband Name | : | மகாராஜா |
| Village | : | தெற்கு நாயக்கன் பேட்டை | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 , அ.சா.2 ஐ தெரியும் ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர். பவுன்ராஜ் வீடும் எனது வீடும் எதிரெதிர் வீடுதான். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்பவம் பற்றி நான் கேள்வி பட வில்லை. ஆஜர் எதிரியின்மீது உள்ள வழக்கு பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 19.03.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது வாசலில் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது ஆஜர்எதிரி ஆட்டோவில் வந்து அ.சா.1 ன் இரு சக்கர வாகனத்தை கீழே தள்ளி அ.சா.1, அ.சா.2 ஐ தகாத வார்த்தைகளால் பேசி யாரை கேட்டு கல் நட்டாய் என்று நீ என்ன கலெக்டரா என்று ஒருமையில் பேசினார் என்றும் இருசக்கர வாகனத்தின் சாவியை பிடிங்கி கீழே தள்ளியதில் அ.சா.1க்கு கையில் கீரல் ஏற்பட்டது என்றும் இருவரையும் ஆஜர் எதிரி கொன்று விடுவதாக மிரட்டினார் என்றும் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து அவரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.23 18:11:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 225/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW - 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அரவிந்த் | Father Name | : | ஆசைத்தம்பி |
| Village | : | தெற்கு நாயக்கன் பேட்டை | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்காரர்கள். . சுமார் 1 வருடங்களுக்கு முன்பு நான் எனது வயல் வேலையை முடித்துவிட்டு எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது பவுன் ராஜ் வீட்டின் அருகே போலீசார் நின்று கொண்டிருந்தனர். நான் சென்று பார்த்தபோது சம்பவயிடத்திற்கு சென்று விசாரித்ததற்காக எங்களிடம் கையொப்பம் பெற்றனர். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. பார்வை மகசரில் உள்ள முதல்

கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 20.03.2025 ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த சதீஷ் என்பவரும் எங்கள் தெருவில் உள்ள பவுன்ராஜ் வீட்டின் வழியாக வந்துகொண்டிருந்த போது இவ்வழக்கின் அ.சா.1 செந்தில்குமார் கொடுத்த புகாரின் அடிப்படையில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.23 18:12:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 225/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW - 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ் | Father Name | : | |
| Village | : | தெற்கு நாயக்கன் பேட்டை | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | எலக்டிரிகல் |
| Religion | : | | Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து எலக்டிரிக்கல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரையானவர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்காரர்கள். சுமார் 1 வருடங்களுக்கு முன்பு நான் எனது வேலையை முடித்துவிட்டு எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது பவுன் ராஜ் வீட்டின் அருகே போலீசார் நின்று கொண்டிருந்தனர். நான் சென்று பார்த்தபோது சம்பவயிடத்திற்கு சென்று விசாரித்ததற்காக எங்களிடம் கையொப்பம் பெற்றனர். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. பார்வை மகசரில் உள்ள இரண்டாவது

கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 20.03.2025 ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த அரவிந்த் என்பவரும் எங்கள் தெருவில் உள்ள பவுன்ராஜ் வீட்டின் வழியாக வந்துகொண்டிருந்த போது இவ்வழக்கின் அ.சா.1 செந்தில்குமார் கொடுத்த புகாரின் அடிப்படையில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.23 18:12:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.